# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதலாம் வருட/முதலாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு 2014/2015

## (August/September, 2016)

## EC 1112 Fundamentals of Micro Economics

LIBRARY
04 MAY 2017
EASTERN UNIVERSITY, SRI LANKA

நேரம்: 02 மணித்தியாலங்கள்

பகுதி I ல் இரு வினாக்களுக்கும் பகுதி II ல் இரு வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி I

01. (i) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை அடையாளப்படுத்துக? (08 புள்ளிகள்)

(ii) வளங்கள் செயற்றிறன்மிக்க விதத்தில் பயன்படுத்தப்பட வேண்டுமாயின் அதன் பொருட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனைகள் யாவை? (05 புள்ளிகள்)

(iii) நாடொன்றின் பொருளாதாரச் செயலாற்றத்தினை மதிப்பிடுவதற்கு உற்பத்தி இயல்தகவு வளையியானது எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதை விளக்குக. (07 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

02. (i) விலைப்பொறிமுறை (Price Mechanism) அல்லது சந்தைப்பொறிமுறை (Market Mechanism) என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது? (05 புள்ளிகள்)

(iii) உருளைக்கிழங்கிற்கான சந்தைக் கேள்வி மற்றும் சந்தை நிரம்பல் என்பன பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

நிரம்பல் $QS = -100+200P$

கேள்வி $Qd = 500-100P$

(விலை ரூபாவிலும் தொகை வாரத்திற்கான உருளைக்குகள் கிலோகிராமிலும் தரப்பட்டுள்ளன).

(அ) சந்தைக்கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளை வரைபடமொன்றில் வரைக. (05 புள்ளிகள்)

(ஆ) சந்தை சமநிலையில் விலை மற்றும் தொகையயினைக் கணிப்பிடுக? (05 புள்ளிகள்)

(இ) அரசாங்கம் விவசாயிகளுக்கு ஒரு கிலோகிராம் (1Kg) உருளைக்கிழங்கிற்கு ரூபா 25 உத்தரவாத விலையை வழங்கத் தீர்மானிக்கின்றது. விவசாயிகள் தற்போது எவ்வளவு கிலோகிராம் (Kg) உருளைக்கிழங்கினை நிரம்பல் செய்வார்கள் என்பதைக் கணிக்க. (05 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

03. (i) காரணிச்சந்தையும், பொருட்சந்தையும் வேறுபடுத்துக. (05 புள்ளிகள்)

(ii) "முயற்சியாண்மை" என்ற பதத்தினை வரைவிலக்கணப்படுத்துக. (05 புள்ளிகள்)

(iii) நிரம்பல் வளையி மேல்நோக்கிய சரிவைக் கொண்டிருப்பதற்கான காரணங்களை தருக?

(05 புள்ளிகள்)

(iv) சந்தை நிரம்பல் வளையியின் இடப்பெயர்வை ஏற்படுத்தக்கூடிய ஐந்து காரணிகளை இனம் காண்க.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி II

04. (i) பல்வகைப் பொருளாதார முறைகள் காணப்படுவதற்கான காரணங்களை ஆராய்க.

(15 புள்ளிகள்)

(ii) "இலங்கைப் பொருளாதாரமானது ஒரு கலப்புப் பொருளாதாரமாக கருதப்படுகின்றது" இக் கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(15 புள்ளிகள்)

(மொத்தம் 30 புள்ளிகள்)

05 (i) நெகிழ்ச்சிக் கணிப்பீடானது பொருளியல் ரீதியாக எவ்வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது என்பது பற்றி ஆராய்க.

(15 புள்ளிகள்)

(ii) நிரம்பல் நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகளை ஆராய்க.

(15 புள்ளிகள்)

(மொத்தம் 30 புள்ளிகள்)

06 (i) குறுங்கால உற்பத்திக் கோட்பாட்டினை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக

(15 புள்ளிகள்)

(ii) தனியுரிமை மற்றும் நிறைபோட்டிச் சந்தை அமைப்புக்களை வேறுபடுத்தி ஆராய்க.

(15 புள்ளிகள்)

(மொத்தம் 30 புள்ளிகள்)